

முதலமைச்சர் கோப்பைக்கான மாவட்ட அளவில் நடைபெற்ற இறகுப் பந்து போட்டியில் முதல் பரிசை வென்ற புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜாவுக்கு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் பரிசு வழங்கி பாராட்டினர். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ஐ.சா.மெர்சி ரம்யா, நகர் மன்றத் தலைவர் திருமதி சே.திலகவதி செந்தில் ஆகியோர் கலந்துகொண்டனர்.



உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை சார்பில் முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு மற்றும் சான்றிதழ்களை வழங்கி வாழ்த்தினார். சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். சி.பழனி, மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ. சட்டமன்ற உறுப்பினர் இரா.இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன் உள்ளிட்ட கல்லூரி முதல்வர், பேராசிரியர்கள், விளையாட்டு துறை அதிகாரிகள் பலர் உடனிருந்தனர்.

### தூய இருதய ஆண்டவர் ஆலய 131வது ஆண்டு பெருவிழா!

# தேர்பவனியை அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார்!

செஞ்சி, ஜூன் 22-

அணிலாடியில் உள்ள பழமை வாய்ந்த தூய இருதய ஆண்டவர் ஆலயத்தில் நடைபெற்ற 131 வது ஆண்டு பெருவிழா தேர் பவனி நிகழ்ச்சியை அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார்.

விழுப்புரம் மாவட்டம் வல்லம் ஒன்றியம் அணிலாடி ஊராட்சியில் பழமை வாய்ந்த தூய இருதய ஆண்டவர் ஆலயத்தின் 131 வது ஆண்டு பெருவிழா கடந்த 8ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது.

தொடர்ந்து தேர் பவனியும், சிறப்பு திருப்பலி நிகழ்ச்சியும் நற்கருணை ஆசீர்வாதமும் நடைபெற்றது. விழாவின் முக்கிய நிகழ்வாக தேர் பவனி விழா 17ந் தேதி இரவு 8 மணிக்கு நடைபெற்றது.

இதை முன்னிட்டு காலையில் தூய இருதய ஆண்டவர் திருவிழா திருப்பலியும், மாலையில் சிறப்பு திருப்பலி கூட்டுப் பிரார்த்தனையும், இரவு ஆடம்பர தேர் பவனியும், நற்கருணை ஆசீர்வாத நிகழ்ச்சியும் நடைபெற்றது.

இந்திய மாகாண தலைவர் அருட்தந்தை சேவியர் துரைராஜ் தலைமை தாங்கினார். பங்குதந்தைகள்மரிய நாதன், சகாய தாஸ்,ஜெயபிரகாஷ், அந்தோணிசாமி, ஆனந்தராஜ், ஆகியோர் சிறப்பு திருப்பலி நடத்தினர்.

விழாவில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு இயேசுவிற்கு மாலை அணிவித்துசிறப்பு பிரார்த்தனை செய்தார்.

தொடர்ந்து ஆடம்பர தேர் பவணியை அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார். இதில் ஏராளமான கிறிஸ்தவ பெருமக்கள் கலந்து கொண்டு சாமி தரிசனமும், சிறப்பு பிரார்த்தனை செய்தனர்.ஆடம்பர தேர் பவனி ஊரின் அனைத்து வீதிகளில் சென்று மீண்டும் தூய இருதய ஆண்டவர் ஆலயத்தில் வந்தடைந்தது

இதில் ஒன்றிய செயலாளர்கள் அண்ணாதுரை, துரை, இளம்வழுதி, மாவட்ட கவுன்சிலர் அன்பு செழியன்,ஒன்றிய கவுன்சிலர் சாந்தோஸ் மேரி ஸ்டாலின், ஊராட்சிமன்ற தலைவர் பிலோமினாள், துணைத் தலைவர் ஆனந்த் ஆரோக்கிய மேரி, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் லாரன்ஸ்,கிராம நல குழு தலைவர் மரியா மோசனந்தம், டான் போஸ்கோ, முன்னாள் ஒன்றிய பொருளாளர் தமிழரசன்,நிர்வாகிகள் தாஸ், ராபர்ட், ஹென்றி, ஜானகிராமன், லட்சுமணன், மண்ணாங்கட்டி, முருகன், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### புதுக்கோட்டையில் புதிதாக துவங்கப்பட உள்ள

# பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆய்வு!

புதுக்கோட்டை, ஜூன் 22-

இதன் பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அவர், 2021 தொடங்கி புதுக்கோட்டையில் 63 கோடி செலவில் பல் மருத்துவக்கல்லூரியின் கட்டுமான பணி தொடங்கப்பட்டு, அப்பணி நிறைவடையும் சூழலில் அடுத்த மாதம் மாணவர் சேர்க்கை தொடங்குகிறது.

1953 ஆம் ஆண்டு ஒரு அரசு பல்மருத்துக்கல்லூரி தொடங்கப்பட்டது, அதன் பின் 70 ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் ஒரு அரசு பல் மருத்துவக் கல்லூரி புதுக்கோட்டையில் தொடங்கபடுகிறது.

தேசிய மருத்துவ கவுன்சில் ஆண்டுதோறும் இந்தியா முழுவதும் உள்ள மருத்துவ கல்லூரிகளின் தரம் குறித்து ஆய்வு செய்வார்கள், அதன் அடிப்படையில் தான் தமிழகத்தில் சென்னை ஸ்டான்லி, திருச்சி, தர்மபுரிஆகிய மூன்று மருத்துவக் கல்லூரிகளில் சிறு சிறு குறை பாடுகளை கூறினார்கள். அதனை நிவர்த்தி செய்து அறிக்கை அனுப்பிய தன் மூலம் தற்போது அந்த மூன்று மருத்துவக் கல்லூரிகளிலும் மாணவர் சேர்க்கை நடத்த தேசிய மருத்துவ கவுன்சில் அனுமதி அளித்துள்ளது.

முன்னாள் சுகாதாரத் துறை அமைச்சராக இருந்த விஜயபாஸ்கர் அமைச்சராக இருந்த காலகட்டத்தில் தூங்கிக் கொண்டு இருந்ததால் தான் தற்போது அந்தத் துறையை தூக்கி நிறுத்தக்கூடிய நிலை உள்ளது, அவருடைய தூக்கத்தினாலயும் நிர்வாக சீர்கேட்டினால் இதுவரை செய்ய முடியாத விஷயங்களை தற்போது செய்து வருகின்றோம், தமிழ்நாடு முதலமைச்சர் பதினைந்து மாத காலத்தில் ஆறு லட்சத்து 3 ஆயிரம் சதுர அடி பரப்பில் உள்ள கட்டிடத்தை தமிழ்நாடு வரலாற்றிலேயே முதல் முறையாக கட்டி 15 மாதத்தில் திறந்து வைக்கப்பட்டிருப்பது என்பது இந்தத் துறையில் நடைபெற்றுள்ள மகத்தான சாதனை, மக்களை தேடி மருத்துவத்தில் ஒரு கோடியே ஐம்பதாயிரத்திற்கும் மேலான மக்கள் பயனடைந்துள்ளனர் இன்னுயிர் காப்போம் திட்டத்தில் ஒரு லட்சத்து 67 ஆயிரம் உயிர்கள் கடந்த இரண்டு ஆண்டுகளில் காப்பாற்றப்பட்டுள்ளது, இதையெல்லாம் பார்த்து பொறுத்துக் கொள்ள முடியாத முன்னாள் அமைச்சர் விஜய பாஸ்கர் சுகாதாரத்துறை தூங்குவதாக தெரிவித்துள்ளார் தூங்குவது அவரா அல்லது துறையா என்பது மக்களுக்கு நன்றாக தெரியும் என்றார்.

### முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டி!

# நாமக்கல்லில் விளையாட்டு வீரர்களுக்கு பரிசு - பாராட்டுச் சான்றிதழ்கள்!

### அமைச்சர் மா.மதிவேந்தன் - கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. வழங்கினர்

நாமக்கல், ஜூன் 22-

நாமக்கல் அரசு மருத்துவக் கல்லூரி கலையரங்கில் மாவட்ட அளவிலான முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற 1780 விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு ரூ.41.58 லட்சம் மதிப்பீட்டில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் பரிசு மற்றும் பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா தலைமை வகித்தார். நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர்கள் நாமக்கல் பெ.இராம லிங்கம், சேந்தமங்கலம் கு. பொன்னுசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்ச்சியில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் பரிசு மற்றும் பாராட்டு சான்றிதழ்களை வழங்கி பேசும் போது, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விளையாட்டு துறைக்கு முக்கியத்துவம் வழங்கி விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். அந்த வகையில் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும் முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளை மாவட்ட அளவில் சிறப்பாக நடத்தியுள்ளார்.

நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் கடந்த ஜனவரி 28 ந் தேதி அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டு போட்டிகளை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகள் நாமக்கல் மாவட்டத்தில் மாவட்ட, மண்டல அளவில் நடைபெற்றது. இதில் கபடி, சிலம்பம், தடகளம், கூடைப் பந்து, இறகுப்பந்து, கால்பந்து, வளைகோல் பந்து, நீச்சல். கையுந்து பந்து, மேசைப்பந்து. உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர், பொது மக்கள், அரசு ஊழியர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் ஆகிய ஐந்து பிரிவுகளில் ஆண் / பெண் இருபாலருக்கும் மாவட்ட அளவில் 42 வகையானப் போட்டிகளும், மண்டல அளவில் 8 வகையான போட்டிகளும் என 50 வகையான போட்டிகளும் நடைபெற்றது. இப்போட்டிகளில் 12 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்கேற்றனர்.

அதன்படி இன்றைய தினம் மாவட்ட அளவிலான முதலமைச்சர் கோப்பை போட்டியில் வெற்றி பெற்ற 1780 விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு ரூ.41.58 லட்சம் மதிப்பீட்டில் பரிசு மற்றும் பாராட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளது. விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற அனைத்து வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன். விளையாட்டு வீரர்கள் தொடர்ந்து விளையாடி தேசிய அளவில், உலக அளவில் பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற வேண்டும். நாமக்கல் மாவட்டம் கல்வியில் சிறந்த மாவட்டமாக விளங்கி வருகிறது. அதேபோன்று விளையாட்டு துறையிலும் நாமக்கல் மாவட்டம் மாநில அளவில் தேசிய அளவில் சிறந்து விளங்கிடும் வகையில் வெற்றி பெற்று நாமக்கல் மாவட்டத்திற்கு பெருமை தேடி தர வேண்டும் என வனத்துறை அமைச்சர் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் முதன்மை கல்வி அலுவலர் ப.மகேஸ்வரி, மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் எஸ் கோகிலா மற்றும் அரசு அலுவலர்கள், விளையாட்டு பயிற்றுநர்கள், வீரர், வீராங்கனைகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### மாவட்ட ஆட்சியர் மரு. ச.உமா தலைமை - ஏ.கே.பி.சின்ராஜ் எம்.பி முன்னிலை

# ரூ.6.37 கோடி மதிப்பீட்டில் நாமக்கல் மருத்துவக் கல்லூரிக்கு குடிநீர் இணைப்புக் குழாய் அமைக்கும் பணி!

### கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி துவக்கி வைத்தார்!

நாமக்கல், ஜூன் 22-

நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் புதிய அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில் குடிநீர் வசதி இல்லாமல் இருந்து வந்தது. இதனால் மருத்துவமனை வரும் நோயாளிகள் குடிநீர் இன்றி பாதிக்கப்பட்டு வந்தனர். இதையடுத்து தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் கவனத்திற்கு சென்றவுடன் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு உடனடியாக குடிநீர் இணைப்பு வழங்க உத்தர விட்டார்.

அதன்படி, தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க நாமக்கல் மாவட்டம், எலச்சிபாளையம் ஊராட்சி ஒன்றியம், முசிறி ஊராட்சியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நீருந்து நிலையத்திலிருந்து நாமக்கல் புதிய மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு குடிநீர் வழங்குவதற்காக 12.50 கி.மீ தொலைவிற்கு இணைப்பு குழாய்கள் அமைக்க ரூ.6.37 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

குடிநீர் வழங்க இணைப்பு குழாய்கள் அமைக்கும் பணிக்கான துவக்க விழா நடைபெற்றது. நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா தலைமை தாங்கினார். நாமக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.கே.பி. சின்ராஜ் முன்னிலை வகித்தார். நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் துவக்கி வைத்தார்.

நாமக்கல் புதிய மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்படும் கூட்டு குடிநீர் திட்ட முசிறி கீழ்நிலை நீர்த்தேக்க தொட்டியில் இருந்து நாள் ஒன்றுக்கு 14 லட்சம் லிட்டர் குடிநீர் விநியோகம் செய்திடும் வகையில் அமைத்து நீர் வழங்கப்பட உள்ளது. இதன் மூலம் நாமக்கல் அரசு மருத்துவமனை வளாகத்தில் கட்டப்பட்டுள்ள 500 படுக்கைகள் கொண்ட மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்காக கொண்டு வரப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நாமக்கல் செயற்பொறியாளர் ராமமூர்த்தி, உதவி செயற்பொறியாளர் அகிலா பானு, உதவி பொறியாளர் முனியன், எலச்சிபாளையம் ஒன்றிய செயலாளர் எம். தங்கவேல், கொ.ம.தே.க நாமக்கல் புறநகர் மாவட்ட தலைவர் பெரியசாமி மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### புதுக்கோட்டையில் முதலமைச்சர் கோப்பைக்கான

# விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள்

### அமைச்சர்கள் எஸ்.ரகுபதி - சிவ.வீ.மெய்யநாதன் வழங்கினர்

புதுக்கோட்டை, ஜூன் 22-

புதுக்கோட்டை கற்பக விநாயகா திருமண மண்டபத்தில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில், மாவட்ட அளவிலான தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் 19.06.2023 அன்று. பரிசுகளை வழங்கினார்கள். இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் ஐ.சா.மெர்சி ரம்யா தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட அளவிலான தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளில் 7,616 பங்கேற்பாளர்கள் பங்கேற்று விளையாடியதில் 1,470 விளையாட்டு வீரர், வீராங்கனைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, முதலிடம் பிடித்தவர்களுக்கு ரூ.3,000 மும், இரண்டாமிடம் பிடித்தவர்களுக்கு ரூ.2,000மும், மூன்றாமிடம் பிடித்தவர்களுக்கு ரூ.1,000 மும் என மொத்தம் ரூ.30,14,000 மதிப்பிலான பரிசுத் தொகைகள் வழங்கப்பட்டன.

மேலும் மாநில அளவிலான தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளில் புதுக்கோட்டை மாவட்டத்தின் சார்பாக 630 வீரர் வீராங்கனைகள் பங்கேற்க உள்ளனர். முதலிடம் பிடிப்பவர்களுக்கு ரூ.1,00,000 மும், இரண்டாமிடம் பிடிப்பவர்களுக்கு ரூ.75,000 மும், மூன்றாமிடம் பிடிப்பவர்களுக்கு ரூ.50,000 மும் பரிசுத் தொகையாக வழங்கப்பட உள்ளது.

பின்னர் அமைச்சர் எஸ். ரகுபதி தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தில் விளையாட்டு கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். முதலமைச்சரின் கோப்பைக்கான 12 விளையாட்டுகளில் 5 பிரிவினர்களுக்கு மாவட்ட அளவில் நடத்தப்பட்டு அதில் வெற்றி பெற்ற வீரர், வீராங்கனைகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டு மாநில அளவிலான போட்டிகளுக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளனர்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் இந்தியாவின் விளையாட்டு தலைநகரமாக சென்னையை மாற்றும் வகையில் பல்வேறு வகையான உலக அளவில் விளையாட்டுப் போட்டிகள் சென்னையில் நடத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, நமது வீரர், வீராங்கனைகளிடையே விளையாட்டுப் போட்டிகளை ஊக்கப்படுத்தி வருகிறார்கள். மேலும் விளையாட்டுத் துறையில் சாதிக்கும் நபர்களுக்கு தமிழக அரசு கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் முன்னுரிமை அளித்து அவர்களின் விளையாட்டு திறனை மேம்படுத்தி வருகிறது.

எனவே இன்றையகால இளைஞர்கள் அனைவரும் படிப்புடன் விளையாட்டிலும் ஆர்வம் செலுத்தி தமிழக அரசால் மாவட்டந்தோறும் நடத்தப்பட்டு வரும் முதலமைச்சரின் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று மாவட்ட மற்றும் மாநில அளவில் சிறப்பிடம்பிடித்து புதுக்கோட்டை மாவட்டத்திற்கு பெருமை சேர்க்க வேண்டும் என அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

பின்னர் அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் தெரிவித்ததாவது; தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விளையாட்டுத் துறையில் தமிழகம் பல்வேறு சாதனைகளை நிகழ்த்துவதற்காக கடந்த 2 ஆண்டுகளில் விளையாட்டுத் துறைக்கு தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி வருகிறார்கள். மேலும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பதவியேற்றதும் முதல் கையெழுத்தாக மாவட்ட மற்றும் மாநில அளவில் முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகள் மாற்றுத் திறனாளிகள் உள்ளிட்ட 5 பிரிவுகளின்கீழ் நடைபெறும் என அறிவித்து அதற்கான நிதியும் ஒதுக்கீடு செய்தார்கள். அதன்படி நடத்தப்பட்ட மாவட்ட அளவிலான போட்டிகளில் வெற்றிபெற்ற வீரர், வீராங்கனைகள் மாநில அளவிலான போட்டிகளுக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளனர்.

தமிழகத்தில் நடத்தப்பட்ட 44வது ஒலிம்பியாட் போட்டி உலகமே வியந்து பார்க்கும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சிறப்பாக நடத்தப்பட்டு தமிழகத்திற்கு சிறப்பு சேர்க்கப்பட்டது. மேலும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் தமிழகத்தில் உள்ள விளையாட்டு வீரர்கள் அனைவரும் உலக அளவில் சிறந்து விளங்கும் வகையில் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை ஆரம்பிக்கப்பட்டு, விளையாட்டுகளில் வெற்றிபெறும் நபர்களுக்கு சிறப்பு பயிற்சிகள் அளிக்கப்பட்டு, அவர்களை சிறந்த விளையாட்டு வீரர்களாக உருவாக்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றார்.



நாமக்கல் அரசு மருத்துவக் கல்லூரி கலையரங்கில் மாவட்ட அளவிலான முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற 1780 விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு ரூ.41.58 லட்சம் மதிப்பீட்டில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் ஆகியோர் பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினர். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா, சட்டமன்ற உறுப்பினர்கள் நாமக்கல் பெ.இராமலிங்கம், சேந்தமங்கலம் கு.பொன்னுசாமி மற்றும் அரசு அலுவலர்கள், விளையாட்டு பயிற்றுநர்கள், வீரர், வீராங்கனைகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி அறிஞர் அண்ணா அரசு மருத்துவமனையில், ரூ.46 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள, மாவட்ட தலைமை மருத்துவமனை கட்டடப் பணிக்கு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர்சி வ.வீ.மெய்யநாதன் ஆகியோர் 19.06.2023 அன்று அடிக்கல் நாட்டினார்கள். உடன் இயக்குநர் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் டாக்டர்.ஏ.சண்முககனி, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா, இராமநாதபுரம் பாராளுமன்ற உறுப்பினர் நவாஸ்கனி, அறந்தாங்கி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.டி.ராமச்சந்திரன், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர்.வை.முத்துராஜா, அறந்தாங்கி நகர்மன்றத் தலைவர் ஆனந்த், நகர்மன்ற துணைத் தலைவர் தி.முத்து (எ) சுப்ரமணியன், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.